RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 122 | மே.9 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியீடு: தமிழகத்தில் 95.2% பேர் தேர்ச்சி

சென்னை: மே.9-

தமிழகத்தில் பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவுகள் நேற்று வெளியானது. அதன்படி மொத்தம் 7.53 லட்சம் மாணவர்கள் (95.20 சதவீதம்) தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவிகள் 4,06,167 பேர் (97 சதவீதம்). தேர்ச்சி பெற்ற மாணவர்கள் 3, 47, 527 பேர் (93.19 சதவீதம்)

இந்த முறையும் வழக்கம்போலவே தேர்ச்சி விகிதத்தில் மாணவிகளே அதிகம் இடம்பெற்றுள்ளனர். மாணவர்களை விட 3.81 சதவீதம் அதிகமாக மாணவிகள் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்.

இந்த தேர்வில் பங்கெடுத்த மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 7,536. இதில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற பள்ளிகள் 2,639. இதில் அரசுப் பள்ளிகள் 489.

தேர்ச்சி விகிதத்தில் ஈரோடு, சிவகங்கை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் முதல் 3 இடங்களைப் பெற்றுள்ளன.

ஈரோடு 98.87 சதவீதம்
சிவகங்கை 98.05 சதவீதம்
கன்னியாகுமர் 97.63 சதவீதம்
நெல்லை 97.54 சதவீதம்
திருச்சி 97 சதவீதம்

தமிழக பள்ளிக்கல்வி பாடத் திட்டத்தில் பிளஸ் 2 பொதுத் தேர்வு கடந்த மார்ச் 2 முதல் மார்ச் 26ம் தேதி வரை நடைபெற்றது. 3,412



மையங்களில் 8.27 லட்சம் மாணவ, மாணவிகள் தேர்வு எழுதினர். 150க்கும் மேற்பட்ட மையங்களில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் கடந்த ஏப்.6 முதல் ஏப்.20ம் தேதி வரை நடைபெற்றது.

மாணவர்கள் www.tnresults.nic.in மற்றும் www.dge.tn.gov.in மற்றும் results.digilocker.gov.in ஆகிய இணையதளங்களில் தங்களது பிறந்த தேதி, பதிவு எண் ஆகியவற்றை பதிவு செய்து தேர்வு முடிவுகளை அறியலாம்.

பள்ளி மாணவர்கள் உறுதிமொழிப் படிவத்தில் குறிப்பிட்ட செல்போன் எண் மற்றும் தனித் தேர்வர்கள் இணையவழியில் விண்ணப்பித்தபோது வழங்கிய செல்போன் எண்ணுக்கு குறுஞ்செய்தி மூலமாகவும் தேர்வு முடிவுகள் அனுப்பப்படும்.

இந்த ஆண்டு முதல்முறையாக தமிழ்நாடு மின்ஆளுமை முகமை மூலம் வாட்ஸ்அப் செயலியில் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி,78452 52525 என்ற எண்ணுக்கு வாட்ஸ்அப்பில் ‘பிவீ’ என்று குறுந்தகவல் அனுப்பி, அடுத்தடுத்து துறை பெயர், தேர்வர்களின் வகுப்பு, தேர்வு எண், பிறந்த தேதி ஆகியவற்றை பதிவிட்டு, தேர்வு முடிவுகளை அறியலாம். இதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் 14417 என்ற உதவி மைய எண்ணை தொடர்பு கொள்ளலாம்.







## சிவகங்கை: 585 பள்ளி வாகனங்கள் தீவிர ஆய்வு : பாதுகாப்பு விதிமீறல்களுக்கு கடும் எச்சரிக்கை

சிவகங்கை, மே.9-

சிவகங்கை மாவட்டத்தில் புதிய கல்வியாண்டை முன்னிட்டு, தனியார் பள்ளி வாகனங்களின் பாதுகாப்பு மற்றும் தகுதி நிலை குறித்து மாவட்ட நிர்வாகம் சார்பில் நேற்று (08.05.2026) தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வில், பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பல்வேறு அம்சங்கள் நுணுக்கமாக பரிசோதிக்கப்பட்டன.

தமிழக அரசின் மோட்டார் வாகனங்கள் (பள்ளி வாகனங்கள் முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சிறப்பு விதிகள் ஞ 2012ன் படி, ஒவ்வொரு ஆண்டும் பள்ளிகள் திறப்பதற்கு முன்பாக பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யப்படுவது கட்டாயமாகும். அதன்படி, 20262027 கல்வியாண்டிற்கான இந்த ஆண்டு ஆய்வு சிவகங்கை மற்றும் காரைக்குடி ஆகிய இரண்டு மையங்களில் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 162 தனியார் பள்ளிகளுக்குச் சொந்தமான மொத்தம் 585 பள்ளி பேருந்துகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இதில், சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலக வரம்பிற்குட்பட்ட 265 வாகனங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மைதானத்தில் பரிசோதிக்கப்பட்டன. அதேபோல், காரைக்குடி பகுதி அலுவலக வரம்பிற்குட்பட்ட 320 வாகனங்கள் அழகப்பா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் ஆய்வு செய்யப்பட்டன.

ஆய்வின்போது, வாகனங்களின் தொழில்நுட்ப தகுதி, அவசரகால வெளியேறும் வசதி, தீ அணைப்பு கருவி, முதல் உதவி பெட்டி, வேகக் கட்டுப்பாட்டு கருவி, நிறிஷி வசதி, மாணவர்கள் பாதுகாப்பாக ஏறி இறங்கும் ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் பரிசோதிக்கப்பட்டன. மேலும், ஓட்டுநர்களின் உரிமம், அனுபவம் மற்றும் உதவியாளர்கள் நியமனம் குறித்தும் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

பாதுகாப்பு விதிமுறைகளை முழுமையாக பின்பற்றிய வாகனங்களுக்கு மட்டுமே இயக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சிறிய அளவிலான குறைபாடுகள் கண்டறியப்பட்ட வாகனங்களுக்கு குறிப்பிட்ட காலக்கெடு வழங்கப்பட்டு, அவை சரிசெய்யப்பட்ட பிறகே மீண்டும் ஆய்வு செய்து அனுமதி வழங்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் கூறுகையில், “மாணவர்களின் உயிர் பாதுகாப்பு எங்களது முதன்மை பொறுப்பு. பள்ளி வாகனங்களில் பாதுகாப்பு விதிகளில் எந்தவித அலட்சியமும் அனுமதிக்கப்படாது. பள்ளி நிர்வாகங்களும் பெற்றோர்களும் இதுகுறித்து முழு விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்” என தெரிவித்தார்.

## பிளஸ் 2 தேர்வு முடிவுகள்: மு.க.ஸ்டாலின், இபிஎஸ் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து

சென்னை: மே.9-

பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், திமுக தலைவர் ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் ஆகியோர் மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்: பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் வெற்றி பெற்றுள்ள அனைத்து மாணவ மாணவிகளுக்கும் வாழ்த்துகள்.95.2% மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அன்பில் மகேஷ் தொடர்புகொண்டு, சென்ற ஆண்டைவிட அதிகமான மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்று பெருமிதத்தோடு கூறியபோது, பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

மாணவச் செல்வங்கள், வாழ்வில் மேன்மையடைய மேற்படிப்புகளில் மேலும் கவனம் செலுத்திப் படியுங்கள். இத்தேர்வில் இம்முறை தேர்ச்சி



பெறத் தவறியவர்கள் மனம் தளர வேண்டாம்; உங்களுக்கான அடுத்தடுத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுங்கள். கல்வியே வாழ்வின் வெற்றிக்குத் துணை.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி: இன்று +2 தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், தேர்ச்சி பெற்ற மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள். உங்கள் கனவுகளை நோக்கிய உயர்கல்விப் பயணத்தை மிகுந்த கவனத்தோடு தேர்ந்தெடுங்கள். தங்கள் பெற்றோர் மற்றும் அனுபவமிக்க ஆசிரியர்களின் ஆலோசனைகளைக் கேட்டுக்கொண்டு, சரியான பாதையைத் தேர்ந்தெடுங்கள்.

அதேபோல், இந்த தேர்வில் தேர்ச்சி அடையத் தவறிய மாணவர்கள் துவண்டுவிட வேண்டாம். வாழ்க்கை எந்த கதவையும் எப்போது வேண்டுமானாலும் திறக்கலாம். அதனால், நன்கு படித்து, துணைத் தேர்வுகள் வாயிலாக தேர்ச்சி அடையுங்கள் என உங்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ்: மு.க.ஸ்டாலினின் வழிகாட்டுதலின்படி, மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க தொடர் முயற்சிகளை மேற்கொண்டதன் பலனாக +2 தேர்ச்சி விகிதத்தில் 0.17% உயர்வு. அனைத்து மாவட்டங்களுக்கும் நேரடியாக சென்று ஷிலிகிஷி அறிக்கையை முன்னிறுத்தி, தலைமையாசிரியர்களைச் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டோம். அதன் தொடர்ச்சியாக அவர்கள் முன்னெடுத்த முயற்சிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

மாணவச் செல்வங்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். இந்தத் தேர்வு முடிவுகள் என்பது உங்களுக்கானது மட்டுமல்ல. எங்களுக்குமானதுதான். மறுவாய்ப்பு தேவைப்படும் மாணவர்கள் உடனடியாக துணைத் தேர்வெழுதி வெற்றி பெற வாழ்த்துகள்.

## விஜய் ஆட்சி அமைக்க இடதுசாரிகள் ஆதரவு: 118க்கு இன்னும் 2 மட்டுமே தேவை!

சென்னை: மே.9-

தவெக ஆட்சியமைக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவளித்த நிலையில், தற்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்று தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது, அக்கட்சிக்கு 5 உறுப்பினர்களை கொண்ட காங்கிரஸ் கட்சி ஆதரவளித்த நிலையில், விஜய் ஆட்சியமைக்க மேலும் 6 பேரின் ஆதரவு தேவைப்பட்டது. ஆட்சியமைக்க அழைக்கக் கோரி ஆளுநரிடம் தவெக தலைவர் விஜய் கோரிக்கை வைத்த நிலையில், பெரும்பான்மைக்கான பட்டியலை அளிக்குமாறு அவர் கேட்டிருந்தார். இந்த நிலையில் விசிக, சிபிஐ மற்றும் சிபிஎம்



கட்சிகளிடம் தவெக ஆதரவு கேட்டிருந்தது.

இதனையடுத்து இன்று ஆலோசனை நடத்திய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தவெக ஆட்சியமைப்பதற்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக அறிவித்தது. அதனைத் தொடர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தவெகவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது. இரு கட்சிகளுமே ஆதரவுக் கடிதங்களை அளித்துள்ளன.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கீழ்வேளூரில் போட்டியிட்ட லதா மற்றும் பத்மநாதபுரத்தில் போட்டியிட்ட செல்லசாமி ஆகியோர் வெற்றி பெற்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திருத்துறைப்பூண்டியில் போட்டியிட்ட மாரிமுத்து மற்றும் தளியில் போட்டியிட்ட ராமச்சந்திரன் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

இடதுசாரிகள் ஆதரவு தெரிவித்த காரணத்தால் தவெகவின் ஆதரவு 116 ஆக உயர்ந்துள்ளது. இந்த நிலையில், தவெக ஆட்சியமைக்க மேலும் 2 உறுப்பினர்களின் ஆதரவு மட்டுமே தேவை. இந்தச் சூழலில், 2 உறுப்பினர்களை கொண்ட விசிக இன்று மாலை தங்களின் முடிவை அறிவிப்பதாக கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## “ஆட்சி அமைக்கும் முயற்சியில் உள்ள எந்த கட்சிக்கும் பாஜக ஆதரவு இல்லை” : நயினார் நாகேந்திரன்

சென்னை: மே.9-

“ஆட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள எந்தவொரு கட்சிக்கும் நாங்கள் வாக்களிக்க மாட்டோம்” என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “தமிழ்நாட்டு மக்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள பாரதிய ஜனதா கட்சி அதே



நோக்கத்துடன் சட்டமன்ற தேர்தலிலும் களம் கண்டது. இருப்பினும் தேர்தல் முடிவுகளை கட்சியானது, மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறது.

மேலும் தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பதற்கான எந்தவொரு வாய்ப்பினையும் அதிகாரத்தையும் மக்கள் பாரதிய ஜனதா கட்சிக்கு இந்த தேர்தலில் வழங்கவில்லை என்று கருதுகிறோம். தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தையும், தேர்தல் முடிவுகளையும் நாங்கள் உளமார மதிக்கிறோம். எனவே தமிழக பாரதிய ஜனதா கட்சியானது, தமிழ்நாட்டில் புதிய அரசை அமைப்பதற்கான எந்தவொரு முயற்சியிலும் தன்னை இணைத்துக்கொள்ள விரும்பவில்லை.

ஆட்சி அமைக்கும் எவ்வித முயற்சியிலும் கட்சியானது எவ்வித நேரடிப் பங்களிப்பையும் மேற்கொள்ள விரும்பவில்லை. மேலும், ஆட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள எந்தவொரு கட்சிக்கும் நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்பதையும் மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நீலகிரி மாவட்ட பாஜக அமைப்பு சாரா தொழில் பிரிவு சார்பாக மருத்துவ காப்பீடு அட்டையை இலவசமாக கொடுக்கப்பட்டது



உதகை மே.9-

நீலகிரி மாவட்ட பாஜக அமைப்பு சார தொழில் பிரிவு சார்பாக அலுவலகத்தில் குருத்துக்குளி பகுதியை சார்ந்த பாஜக நிர்வாகி ரதி அம்மா ரூபாய் 5 லட்சத்திற்கான மருத்துவ காப்பீடு அட்டையும் மற்றும் முதிற்கன்னி உதவித்தொகை பெறுவதற்கான ஆவணங்கள் பெற்று பதிவு செய்து கொடுக்கப்பட்டது.

நஞ்சநாடு, நரிகுழிஆடா கிராம பகுதியை சார்ந்த அமைப்பு சாரா ஏழை தொழிலாளர்கள் பாஜகவின் மீது நம்பிக்கை வைத்து சட்டமன்ற உறுப்பினர் போஜராஜன் வாக்களித்து வெற்றிவாகை சூட வழிவகை செய்த அந்த கிராமப் பகுதி மக்களுக்கும், மற்ற ஏனைய கிராம பகுதி மக்களுக்கும் அதிகப்படியாக மத்திய மாநில அரசுகளின் மக்கள் நலத்திட்ட உதவிகள் கிடைக்க நீலகிரி மாவட்ட பாஜக அமைப்புசாரா தொழில் பிரிவு முன் நின்று செய்து கொடுப்பதென முடிவு செய்து அதன்படி நீலகிரி மாவட்ட பாஜக அமைப்பு சாரா தொழில் பிரிவு மாவட்ட இணை அமைப்பாளர் மகேந்திரன் உதவியோடு நரிகுழிஆடா பகுதியை சார்ந்த சுமார் 15 குடும்பத்தாருக்கு ரூபாய் ஐந்து லட்சத்திற்கான மருத்துவ காப்பீடு அட்டையை இலவசமாக கொடுக்கப்பட்டது



# உதகையில் புலிகள் எண்ணிக்கை கணக்கீடு கள ஆய்வு

உதகை.மே. 9-

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பக கள இயக்குனர் அவர்களின் உத்தரவின் படியும், உதகை வனக்கோட்டம் துணை இயக்குனர் அவர்களின் அறிவுரையின்படியும் உதகை வனக்கோட்டத்தில் தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி ஆண்டுதோறும் நடைபெறும் பருவ மழைக்கு முந்தைய பாகம் 1 (புலிகள், சக மாமிச உண்ணிகள், இரை விலங்குகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களை மதிப்பீடு செய்தல்) கண்காணிப்பு பணி நடைபெற உள்ளது. இப்பணியானது தெப்பக்காடு, கார்குடி, முதுமலை மற்றும் நெலாக்கோட்டை ஆகிய வனச் சரகங்களில் 29 நேர்கோட்டு பாதையில் கணக்கெடுப்பு பணி 07 052026 முதல் 11052026 வரை நடைபெறும். இதற்கான பயிற்சி மேம்பட்ட வன உயிரின மேலாண்மை பயிற்சி மையம் தெப்பக்காட்டில் 06.05.2026 ம் தேதி அன்று காலை 10 மணிக்கு நடைபெற்றது.ஒவ்வொரு வனச்சரகத்திலும் பாகம் 1 கண்காணிப்பு பணியில் ஈடுபடும் அனைத்து முன்கள பணியாளர்கள் இப் பயிற்சியில் கலந்து கொண்டனர்.



■ தேனி மாவட்டத்தில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற காவல் துறையினரின் குழந்தைகளுக்கு பாராட்டுதமிழ்நாடு அரசு பொதுத் தேர்வுகளில் சிறப்பான கல்வி சாதனை புரிந்த காவல் துறையினரின் குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஞிகூீ. ஙி. சினேஹாப்ரியா, மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களை நேரில் சந்தித்து பாராட்டு தெரிவித்தார்.

# திருப்பத்தூரில் வரும் திங்கள்கிழமை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்




திருப்பத்தூர், மே.9-

இந்திய தேர்தல் ஆணையத்தால் 15.03.2026 அன்று மாலை 4.00 மணிக்கு தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 க்கான தேர்தல் தேதி அறிவிப்பு வெளி யிடப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளவரை திருப்பத்தூர் மாவட்டத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படாமல் நிறுத்திவைக்க ப்பட்டிருந்தது. தற்போது, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 23.04.2026 அன்று நடைபெற்று, 04.05.2026 அன்று வாக்குகள் எண்ணப்பட்டு, 07.05.2026 அன்று தேர்தல் நடத்தை விதிமுறைகள் திரும்ப பெறப்பட்டுள்ளது. எனவே, திருப்பத்தூர் மாவட்டத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டமானது மீள வரும் திங்கட்கி ழமை 11.05.2026 முதல் தொடர்ந்து நடைப்பெறும் என பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி.இ.ஆ.ப. தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் புதியதாக ஸ்ரீ மஹாகணபதி, ஸ்ரீ நாகாத்தம்மன், ஸ்ரீ சுப்பிரமணி சுவாகி ஆலய பூமிபூஜைவாஸ்துபூஜை



மாதவரம், மே.9-

மாதவரம் தொகுதி புழல் கதிர்வேடு கிராமம் பஜனைக்கோயில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் புதியதாக ஸ்ரீ மஹாகணபதி, ஸ்ரீ நாகாத்தம்மன், ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆகிய தெய்வங்களின் ஆலயத்திற்கான பூமிபூஜை மற்றும் வாஸ்துபூஜை மறைந்த முன்னாள் புழல் ஒன்றிய குழு பெருந்தலைவரும் ஆலய தர்மகர்த்தாவுமான பர்ணபாஸ், மறைந்த முன்னாள் சென்னை மாநகராட்சி மான்ற உறுப்பினருமான வதனாபர்ணபாஸ் குடும்பத்தினர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி 23 வது மாமன்ற உறுப்பினர் ராஜன்பர்ணபாஸ், 31 வது மாமன்ற உறுப்பினர் சங்கீதாபாபு மற்றும் பிரேமலதா ராஜன், தர்மலிங்கம், லட்சுமிதர்மலிங்கம், பாபு, கர்ணன், சவிதாகர்ணன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலச ஸ்தாபிதம், பூர்வாங்க பூஜைகள், புண்யாகவாசனம், ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஸ்ரீ வாஸ்து ஹோமம், ஸ்ரீ நவக்கிரகம் ஹோமம், பூர்ணாஹூதி ,யந்திர பிரதிஷ்டை மற்றும் ஸங்க ஸ்தாபிதம் மஹா தீபாராதனை நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஆலய நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கினர்.



# பழனியில் அரசு உதவி பெறும் பள்ளியில் பயின்ற மாணவி பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் இரண்டாம் இடம் பிடித்து சாதனை

பழனி மே.09-

பழனி அருகே நெய்க்காரப்பட்டி ரேணுகாதேவி அரசு உதவி பெறும் பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு பயின்ற கட்டிட கூலித் தொழிலாளி ராமசாமியின் மகள் மங்களப்பிரியா 588 மதிப்பெண் பெற்று மாவட்ட அளவில் இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார் இதேபோல் நெய்க்காரப்பட்டி பி ஆர் ஜி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் பயின்ற கூலித் தொழிலாளியின் மகன் கார்த்திக் ராஜா 592 மதிப்பெண் பெற்று மாவட்ட அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார். பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டு தெரிவித்தனர்



■ செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் இயங்கிவரும் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு பொது தேர்வில் மொத்தம் 55மாணவர்கள் தேர்வு எழுதினர். அதில் 96 சதவீதம் பெற்று 53 மாணவர்கள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.முதல் இடம் தமிழ்பாரதி 559 மதிப்பெண்கள், இரண்டாம் இடம் முகம்மது ஆசீக் 479, ரோகித்குமார் 457மதிப்பெண்கள் பெற்று உள்ளனர். பொது தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களையும் வெகுவாக பாராட்டி தலைமை ஆசிரியர் சாமிநாதன் மற்றும் உதவி தலைமை ஆசிரியர், பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட சக ஆசிரியர்கள் வாழ்த்தினார்.



# புழல் ஒன்றிய முன்னாள் திமுக செயலாளர் வழக்கறிஞர் பெ.சரவணன் தாயார் திருஉருவ படத்திறப்பு விழா

மாதவரம், மே.9-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சி பெரியதெருவில் வசித்துவரும் புழல் ஒன்றிய முன்னாள் திமுக செயலாளர் வழக்கறிஞர் பெ.சரவணன், பெ.தஷ்ணாமூர்த்தி, பெ. செல்வகுமார். பெ.கௌதமன், பெயரை. பரிமளச்செல்வம், பெ.உதயகுமார், பெ.எழிலன், பெ.கபிலன் ஆகியோர்களின் தாயாரும் முன்னாள் மாவட்ட பிரி திநிதியும் முன்னாள் புழல் ஒன்றிய துணை செயலாளருமான மறைந்த ஜி.பெருமாள்யின் மனைவியுன மகாதேவி பெருமாள்யின் 5ம் ஆண்டு நினைவு அஞ்சலி மற்றும் திருஉருவ படதிறப்பு விழா விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பாரதிசரவணன் மற்றும் புழல் ஒன்றிய முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் பெ.சரவணன் குடும்த்தினர்கள் தலைமை தாங்கி மறைந்த மகாதேவி பெருமாள்யின் திருஉருவ படத்தை திறந்து வைத்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர். பினனர் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் குடும்பத்தினர்கள், நண்பர்கள், அரசியல் பிரமுகர்கள், முன்னாள் ஊராட்சி பிரிதிநிதிகள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# தாம்பரத்தில் மணிதநேய மக்கள் கட்சி சார்பில் தண்னீர் பந்தல் திறப்பு விழா

தாம்பரம் மே.9-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் மணிதநேய மக்கள் கட்சி சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா வடக்கு மாவட்ட செயலாளர் ஜாஹிர் உசேன் தலைமையில் காந்தி சாலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாநில துனைப் பொதுசெயலாளரும், மாமன்ற உறுப்பினருமான தாம்பரம் யாக்கூப் கலந்து கொண்டு நீர்மோர் பந்தலை திறந்து வைத்து சுட்டெரிக்கும் வெய்யிலின் தாகம் தீர்க்க நீர்மோர், ரோஸ்மில்க், தர்பூசணி, வெள்ளரிக்காய், பழரசம் உள்ளிட்டவைகளை பொதுமக்களுக்கு வழங்கினார். இதில் மணிதநேய மக்கள் கட்சியின் மாநில, மாவட்ட, பகுதி மற்றும் வார்டு நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.




# நீதிமன்ற கனவை நனவாக்கும் "சந்துரு அகாடமி"!

## AIBE முதல் மாவட்ட நீதிபதி வரைவல்லுநர்களின் சிறப்பு பயிற்சி!

மதுரை:மே,9-

சட்டம் படிப்போர் மற்றும் சட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு "சந்துரு அகாடமி" சார்பில் அகில இந்திய பார் கவுன்சில் தேர்வு, சிவில் நீதிபதி, அரசு உதவி வழக்கறிஞர், மாவட்ட நீதிபதி உள்ளிட்ட தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சிகள் அனுபவமிக்க வல்லுநர்களால் வழங்கப்படுகின்றன.நேரடி மற்றும் ஆன்லைன் வகுப்புகள் நடைபெறுகின்றன. மூன்றாம் பாலினத்தினருக்கு இலவசமாகவும், SC/ST பிரிவினருக்கு சலுகை கட்டண அடிப்படையிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.தொடர்புக்கு: 7339650446, 9384188295.




# ஆளுநர் அறிவுறுத்தலின்படியே +2 தேர்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளதாக ஆளுநர் மாளிகை அறிவிப்பு

சென்னை:மே.9-

ஆளுநர் அறிவுறுத்தலின்படியே +2 தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதாக ஆளுநர் மாளிகை அறி வித்துள்ளது. 'பள்ளிக்கல்வித்துறைக்கு புதிய அமைச்சர் பொறுப்பேற்பது தாமதமாவதால் முடிவு. மாணவர் நலன் கருதி முடிவுகளை தாமதிக்க வேண்டாம் என ஆளுநர் முடிவு எடுத்தார்' எனவும் ஆளுநர் மாளிகை தெரிவித்துள்ளது

# விளையாட்டு விடுதிகளில்மாணவ, மாணவியர்கள் சேர்க்கைக்கானதேர்வு போட்டிகள்

கிருஷ்ணகிரி, மே 09-

கிருஷ்ணகிரியில் விளையாட்டு விடுதிகளில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கைக்கான தேர்வு போட்டிகள் நடந்தது.

2026-2027ம் ஆண்டிற்கான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், விளையாட்டு விடுதிகளில் மாணவ, மாணவியர்களுக்கான சேர்க்கைக்கு இணையவழி விண்ணப்பங்கள் கடந்த மாதம் 8ம் தேதி முதல் ஷ்ww.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டது. அதன்படி, மாவட்ட அளவிலான விளையாட்டு விடுதி சேர்க்கைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு,



கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில் நேற்று நடந்தது.இதில், தடகளம், கூடைப்பந்து, கிரிக்கெட், கால்பந்து, கைப்பந்து, ஹாக்கி, கபடி, கையுந்துபந்து ஆகிய விளையாட்டுகளுக்கு தேர்வுப் போட்டிகள் நடந்தது. இதில், 90 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டு அலுவலர் நடராஜ முருகன் செய்திருந்தார். இன்று (8ம் தேதி) மாணவியருக்கான நடக்க உள்ள தேர்வுப் போட்டியில், 34 மாணவியர் கலந்து கொள்ள உள்ளனர்.

# பொதுவிநியோகத் திட்ட சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் இன்றுகிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் 8 இடங்களில் நடைபெறும் என ஆட்சியர் தகவல்

கிருஷ்ணகிரி, மே 09-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுவிநியோகத் திட்டம் தொடர்பான மக்களின் குறைகளை நேரடியாக கேட்டு உடனுக்குடன் தீர்வு வழங்கும் நோக்கில், சிறப்பு பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டம் இன்று 09.05.2026 (சனிக்கிழமை) நடைபெற உள்ளது என கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் ச. தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:



பொதுவிநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைகளை களைவதற்கும், பொதுமக்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் பரிசீலித்து நிவர்த்தி செய்வதற்கும் இந்த சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. குடும்ப அட்டைகளில் பெயர் திருத்தம், புதிய உறுப்பினர் சேர்த்தல், பெயர் நீக்கல், முகவரி மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் மனு அளித்து பயன்பெறலாம்.

இந்த குறைதீர்க்கும் கூட்டம் 09.05.2026 இன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. அதன்படி,கிருஷ்ணகிரி வட்டத்தில் முத்துரான் கொட்டாய் கிராமம், ஆலப்பட்டி உள்வட்டம்ஓசூர் வட்டத்தில் கொத்தப்பள்ளி கிராமம், ஓசூர் உள்வட்டம்போச்சம்பள்ளி வட்டத்தில் செல்லக்குட்டப்பட்டி கிராமம், பாரூர் உள்வட்டம் ஊத்தங்கரை வட்டத்தில் ஓலைப்பட்டி கிராமம், கல்லாவி உள்வட்டம் பர்கூர் வட்டத்தில் ஆம்பள்ளி கிராமம், பர்கூர் உள்வட்டம் சூளகிரி வட்டத்தில் பந்தரகுட்டை கிராமம், சூளகிரி உள்வட்டம் தேன்கனிக்கோட்டை வட்டத்தில் கொடியாளம் கிராமம், தளி உள்வட்டம் அஞ்செட்டி வட்டத்தில் மரியாளம் கிராமம், அஞ்செட்டி உள்வட்டம் ஆகிய இடங்களில் கூட்டம் நடைபெறவுள்ளது.எனவே, பொதுமக்கள் தங்களது குடும்ப அட்டை மற்றும் பொதுவிநியோகத் திட்டம் தொடர்பான குறைகளை நேரடியாக வட்ட வழங்கல் அலுவலர்களிடம் மனுவாக அளித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச. தினேஷ் குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.



# கிருஷ்ணகிரிஅரசு இசைப்பள்ளியில் பகுதி நேர கலைப்பயிற்சி97 மாணவ, மாணவிகள் பங்கேற்பு

கிருஷ்ணகிரி, மே 09-

கிருஷ்ணகிரி அரசு இசைப்பள்ளியில் நடைபெறும் பகுதி நேர கலைப்பயிற்சியில் 97 மாணவ, மாணவிகள் பங்கேற்று பயிற்சி பெற்று வருகின்றனர்.சிறுவர்களின் கலை ஆர்வத்தை தூண்டும் வகையில், இளம் வயதிலேயே கலை ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவிக்கவும், தமிழக அரசு கலை பண்பாட்டுத்துறையின் கீழ் இயங்கும், ஜவகர் சிறுவர் மன்றங்கள் வாயிலாக சிறுவர், சிறுமியர்க்கு பகுதி நேர கலைப்பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்ட அரசு இசைப்பள்ளியில் செயல்படும் ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில், கோடைக்கால கலைப்பயிற்சி முகாம் கடந்த 6ம் தேதி துவங்கி வருகிற 15ம் தேதி வரை நடைபெறுகிறது. தினமும் காலை 10 மணி முதல் 12 மணி வரை, குரலிசை, பரதநாட்டியம், ஓவியம், யோகா ஆகிய கலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.இதில், 5 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர், பரதநாட்டியத்தில் 24 பேர், குரலிசையில் 13 பேர், யோகாவில் 20 பேர், ஓவியம் வரைவதில் 40 பேர் என மொத்தம் 97 மாணவ, மாணவியர் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர். நேற்று நடந்த பயிற்சியில், தலைமை ஆசிரியர் திரிவேணி தலைமையில், ஜவகர் சிறுவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் மற்றும் திட்ட அலுவலர் ஞானசக்தி பார்வையிட்டார். பயிற்சி நிறைவு நாளில் மாணவர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது. மேலும் விவரங்களுக்கு, கிருஷ்ணகிரி மாவட்ட ஜவகர் சிறுவர் மன்ற திட்ட அலுவலரை 9943351775 அல்லது 0427-2386197 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்தனர்.

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு உறுதிமொழி ஏற்பு

திருப்பத்தூர்.மே.9-

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு (08.05.2026) அன்று மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி,இ.ஆ.ப., தலைமையில் உலக செஞ்சிலுவை தின உறுதிமொழியினை அரசு துறை அலுவலர்கள், செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள், பள்ளி, கல்லூரிகளின் நிர்வாகிகள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

202526 ஆம் ஆண்டில் சிறப்பாக செயல்பட்ட 10 வங்கிகள், 25 பள்ளிகள், 7 கல்லூரியின் JRC/YRC (Junior Red Cross Society / ഴouth Red Cross Society) சிறப்பான சமூக சேவைக்கான விருதுகளையும், தமிழ்நாடு மாநில செஞ்சிலுவை கிளையின் சார்பாக, மாவட்ட செஞ்சிலுவை கிளைக்கு, 5 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள், 500 பல்ஸ் ஆக்சிஜன் மீட்டர்கள், 20 முதலுதவி பெட்டிகள் ஆகிய மருத்துவ உபகரணங்களை மலை கிராமங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி, இ.ஆ.ப., வழங்கினார்.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு (08.05.2026) அன்று மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி,இ.ஆ.ப., தலைமையில் உலக செஞ்சிலுவை தின உறுதிமொழியினை அரசு துறை அலுவலர்கள், செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள், பள்ளி, கல்லூரிகளின் நிர்வாகிகள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் பின்வரும் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

உலக செஞ்சிலுவை தின உறுதிமொழி இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் உறுப்பினராக நான் மனிதாபிமானத்துடன் செயல்படுவேன் என்றும் இனம், மொழி, மதம், அரசியல் வேறுபாடின்றி ஆபத்தில் உள்ள அனைவருக்கும் எந்தவித எதிர்பார்ப்புமின்றி உதவி செய்வேன் என்றும் உறுதியளிக்கிறேன். செஞ்சிலுவையின் ஏழு அடிப்படைக் கொள்கைகளான மனிதாபிமானம், பாரபட்சமின்மை, நடுநிலைமை, சுதந்திரம், தன்னார்வத் தொண்டு ஒற்றுமை மற்றும் உலகளாவிய தன்மை ஆகியவற்றை பின்பற்றுவேன். பேரிடர் மற்றும் அவசர காலங்களில் காயமடைந்தவர்கள் மற்றும் நோயுற்றவர்களுக்குத் தொண்டாற்றி, மனித நேயத்தை பாதுகாப்பேன் என உளமாற உறுதியளிக்கிறேன் என்ற உலக செஞ்சிலுவை தின உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி,இ.ஆ.ப., வாசிக்க அரசு துறை அலுவலர்கள், செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள், பள்ளி, கல்லூரிகளின் நிர்வாகிகள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

பின்னர், 202526 ஆம் ஆண்டில் சிறப்பாக செயல்பட்ட 10 வங்கிகள், 25 பள்ளிகள், 7 JRC/YRC (Junior Red Cross Society / Youth Red Cross Society) அமைப்புகளுக்கு சிறப்பான சமூக சேவைக்கான விருதுகளையும், தமிழ்நாடு மாநில செஞ்சிலுவை கிளையின் சார்பாக, மாவட்ட செஞ்சிலுவை கிளைக்கு, தலா ரூ.85,000/மதிப்பிலான 5 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள், தலா ரூ.1,500/ மதிப்பிலான 500 பல்ஸ் ஆக்சிஜன் மீட்டர்கள், தலா ரூ.850/ மதிப்பிலான 20 முதலுதவி பெட்டிகள் என மொத்தம் ரூ.11,92,000/ மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை மலை கிராமங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி,இ.ஆ.ப., வழங்கினார்.

இந்நி கழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பாபு, மாவட்ட கருவுல அலுவலர் பாண்டியன், திருப்பத்தூர் மாவட்ட கிளை சேர்மன் கிஷோர் பிரசாத், செஞ்சிலுவை சங்க மேலாண்மை குழு உறுப்பினர் முருகன், செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள், பள்ளி, கல்லூரிகளின் நிர்வாகிகள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# உதவி ஆய்வாளரை சுட்டு விட்டு தப்பியோட முயற்சி: ரவுடியை துப்பாக்கியால் சுட்டுப் பிடித்த போலீஸார்

தூத்துக்குடி:மே.9-

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே போலீஸாரை நாட்டு துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பியோட முயன்ற பிரபல ரவுடியை, போலீஸார் துப்பாக்கியால் சுட்டு பிடித்தனர்.தூத்துக்குடி மினி சகாயபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ஆர்க் என்ற மரிய அந்தோனி (35). இவர் மீது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பல்வேறு காவல் நிலையங்களில் கொலை, கொலை முயற்சி, கொள்ளை உள்ளிட்ட சுமார் 30 வழக்குகள் உள்ளன. இவரை போலீஸார் தீவிரமாக தேடி வந்தனர்.இந்நிலையில் திருச்செந்தூர் அருகே உள்ள சோனகன்விளை காணியாளன்புதூரில் ஒரு வீட்டில் மரிய அந்தோனி தங்கி இருப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. உதவி ஆய்வாளர் ராஜ பிரபு தலைமையிலான தனிப்படை போலீஸார் நேற்று மதியம் காணியாளன்புதூரில் உள்ள வீட்டில் இருந்த மரிய அந்தோனியை பிடிக்க முயன்றனர்.அப்போது, அவர் தன்னிடம் இருந்த நாட்டு துப்பாக்கியால் உதவி ஆய்வாளர் ராஜ பிரபுவை சுட்டு விட்டு தப்பித்து ஓட முயன்றுள்ளார். உடனே உஷாரான உதவி ஆய்வாளர் தன்னிடம் இருந்த துப்பாக்கியால் சுட்டதில் மரிய அந்தோனியின் வலது மார்புக்கும் வயிற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் குண்டு பாய்ந்தது.இதனால் காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்தார். போலீஸார் அவரை உடனடியாக திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி அளிக்கப்பட்ட பின்னர் மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.






மரிய அந்தோனி நாட்டு துப்பாக்கியால் சுட்டதில் காயமடைந்த உதவி ஆய்வாளர் ராஜ பிரபுவும் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அவரை எஸ்.பி.மதன் பார்த்து நலம் விசாரித்தார்.பின்னர் செய்தியாளர்களிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்ததாவது: மரிய அந்தோனி மீது சுமார் 30 வழக்குகள் உள்ளன. தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையம் மீது வெடிகுண்டு வீசிய வழக்கில் அவர் கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருந்தார். இந்த வழக்கு தொடர்பாக அவரை பிடிக்க முயன்ற போது தான் நாட்டு துப்பாக்கியால் எஸ்ஐ ராஜபிரபுவை மரிய அந்தோணி சுட்டு விட்டு தப்பியோட முயன்றார்.இதை தொடர்ந்து தனது உயிரை பாதுகாக்க சட்ட விதிகளுக்கு உட்பட்டு எஸ்ஐ தனது துப்பாக்கியால் ஒரு ரவுண்டு சுட்டுள்ளார். இது தொடர்பாக திருச்செந்தூர் தாலுகா போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என்றார்.

# திருப்பூரில் தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுக்கான கூட்டம்

திருப்பூர்.மே,9-

திருப்பூர் மாவட்டம் ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.05.2026) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தென்கிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நடைபெற்றது. திருப்பூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழைக் காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை, மின்சாரத்துறை, நெடுஞ்சாலைத்துறை, சுகாதாரத்துறை, கூட்டுறவுத்துறை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், கால்நடை பராமரிப்புத்துறை, வனத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை, காவல்துறை, வேளாண்மைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் தென்மேற்கு பருவமழைக் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

குறிப்பாக, திருப்பூர் மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் முகாம்கள் பொதுமக்களை தங்க வைப்பதற்காக 52 நிவாரண கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இம்முகாம்களில் அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம், கழிப்பிடம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை பேரிடர் காலங்களில் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் வெள்ள கட்டுப்பாட்டு அறை 24ஜ்7 நேரமும் உரிய பணியாளர்களுடன் இயங்க வேண்டும். வெள்ளசேதம், கால்நடை இறப்பு போன்ற பேரிடர்களை உடனுக்குடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பேரிடர் மேலாண்மை பிரிவிற்கு உடனுக்குடன் அறிக்கை அனுப்ப வேண்டும். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள திருமூர்த்தி அணை, அமராவதி அணை, உப்பாறு அணை ஆகிய அணைகளுக்கு நீர் வரத்து, அணையின் நீர்மட்டம், நீர்வெளியேற்றம், அணையின் கொள்ளளவு ஆகியவற்றை தென்மேற்கு பருவமழை காலங்களில் தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்க வேண்டும் எனவும், மற்றும் அணையிலிருந்து உபரிநீர் ஆறு மற்றும் கால்வாய்களில் வெளியேற்றும் போது கரையோரம் உள்ள மக்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும் எனவும், கரையோரம் உள்ள மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்ல அறிவுறுத்த வேண்டும் என தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பேரிடரின் போது பொது கட்டிடங்களை முகாம்களாக பயன்படுத்த ஏதுவாக மாவட்ட பேரிடர் மேலாண்மைத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் போதுமானதாகவும் தகுதியானதாகவும் உள்ளதா என ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும் எனவும், மேலும் பொதுப்பணித்துறை கட்டிடங்களில் நிவாரண முகாம்கள் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள கட்டிடங்களில் பழுதுகள் இருப்பின் அதனை சரிசெய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. நீர்நிலைப் புறம்போக்குகளான ஆறு ஏரி. ஓடைவாரி குளம், குட்டை உள்ளிட்ட நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் மேற்படி நீர்நிலைகளின் கரைகளின் உறுதித் தன்மையினை ஆராய்ந்து, பலவீனமாக உள்ள கரைகளை பலப்படுத்த ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நீர்வளத்துறை அலுவலர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் எனவும், நீர்நிலைகளில் பொதுமக்கள், சிறுவர் சிறுமியர் இறங்குவதால் ஏற்படும் உயிர் இழப்புகளை தவிர்க்க நீர்நிலைகளின் ஆழமான பகுதிகள் குறித்த முன்னெச்சரிக்கை விளம்பர பலகையினை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் நீர்நிலைகளின் கரைகளில் வைத்து பொதுமக்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும். வெள்ளத் தடுப்பு பணிக்காக போதுமான அளவில் மணல் மூட்டைகளை தேவைப்படும் இடங்களில் முன்னதாகவே இருப்பு வைத்திட வேண்டும் எனவும், மண்டல அளவிலான ஒருங்கிணைப்புக்குழுவினர் தங்கள் குழுவில் உள்ள பல்வேறு அலுவலர்களுடன் கூட்டங்கள் நடத்தி தயார் நிலையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும். கிராம அளவிலான முதல்நிலை தன்னார்வளர்களுடன் தொடர்பில் இருக்கவேண்டும்.

மேலும், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் கள ஆய்வுகள் மேற்கொண்டு வெள்ளபாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ள பகுதிகளை கண்டறிந்து அது தொடர்பான விபரங்களை சமந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு தெரிவித்து உடனடியாக சீரமைப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும், தென்மேற்கு பருவமழையினால் ஏற்படும் பேரிடர் தொடர்பாக தகவல்களை உடனுக்குடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இயங்கி வரும் அவசர கால கட்டுப்பாட்டு அறையின் கட்டணமில்லா தொலைபேசி எண்கள்.1077 மற்றும் 04212971199 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். தென்மேற்கு பருவமழைக் காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுக்கும் தயார் நிலையில் ஒருங்கிணைந்து பணியற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.து.சு.துரைமுருகன், இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.ஆதிசாமி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



# மத்திய அரசின் மக்கள் விரோத கொள்கைகளை கண்டித்து சிவகங்கையில் விசிக இடதுசாரி கட்சிகள் ஆர்ப்பாட்டம்



சிவகங்கை, மே.09-

மத்திய பாஜக அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டித்து, சிவகங்கை அரண்மனை வாசல் முன்பு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மற்றும் இடதுசாரி கட்சிகள் சார்பில் நேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.வணிக பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டர் விலை தொடர்ந்து உயர்த்தப்படுவது, ரயில்வே துறையில் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது உள்ளிட்டவற்றுக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மத்திய அரசின் இத்தகைய நடவடிக்கைகள் சாதாரண மக்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதிப்பதாக போராட்டக்காரர்கள் குற்றம்சாட்டினர். ஆர்ப்பாட்டத்தில் விசிக சார்பில் மாவட்ட செயலாளர்கள் வே. பாலையா (மானாமதுரை தொகுதி), உஞ்சனை சரவணன் (காரைக்குடி தொகுதி), வெற்றி விஜயன் (சிவகங்கை தொகுதி), மண்டல துணைச் செயலாளர் சங்கு உதயக்குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.மேலும், விசிக மற்றும் இடதுசாரி கட்சிகளின் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். பொதுமக்களின் நலனை பாதிக்கும் திட்டங்களை மத்திய அரசு உடனடியாக கைவிட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

# பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் 2026: 95.20% மாணவர்கள் தேர்ச்சி; மாணவிகள் மீண்டும் சாதனை!

சென்னை மே.09-

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மார்ச் 2026 ல் நடைபெற்ற மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வு முடிவுகளை அரசுத் தேர்வுகள் இயக்ககம் இன்று (மே 8, 2026) வெளியிட்டுள்ளது. இந்த ஆண்டு ஒட்டுமொத்த தேர்ச்சி விகிதம் 95.20%ஆகப் பதிவாகியுள்ளது.தேர்வு முடிவுகளின் முக்கிய அம்சங்கள்: மாணாக்கர் எண்ணிக்கை: இவ்வாண்டு மொத்தம் 7,91,654 பேர் பொதுத்தேர்வு எழுதினர். இதில் 7,53,694 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவியர் முன்னிலை: மாணவிகள் 97.00% தேர்ச்சி பெற்று, மாணவர்களைவிட (93.19%) 3.81% அதிகமாக தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர். கடந்த ஆண்டை விட உயர்வு: 2025 ஆம் ஆண்டு தேர்ச்சி விகிதத்துடன் (95.03%) ஒப்பிடுகையில், இந்த ஆண்டு தேர்ச்சி 0.17% அதிகரித்துள்ளது. பள்ளிகள் சாதனை: தேர்வெழுதிய 7,536 மேல்நிலைப் பள்ளிகளில், 2,639 பள்ளிகள் 100% தேர்ச்சி பெற்றுள்ளன. இதில் 489 அரசுப் பள்ளிகளும் அடங்கும்.

மாவட்ட வாரியான தேர்ச்சி:ஒட்டுமொத்த தேர்ச்சியில் ஈரோடு மாவட்டம் 98.87% பெற்று மாநில அளவில் முதலிடம் பிடித்துள்ளது. அடுத்தடுத்த இடங்களை பின்வரும் மாவட்டங்கள் பெற்றுள்ளன: 1. ஈரோடு 98.87% 2. சிவகங்கை 98.05% 3. கன்னியாகுமரி 97.63% 4. திருநெல்வேலி 97.54% 5. திருச்சி 97.50%அரசுப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், ஈரோடு மாவட்டம் 98.24% தேர்ச்சியுடன் முதலிடத்தில் உள்ளது.பாடம் மற்றும் மதிப்பெண் விவரங்கள்: சதம் அடித்தவர்கள்: ஏதேனும் ஒரு பாடத்தில் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை 16,024ஆகும்.

அதிக சென்டம் பெற்ற பாடங்கள்: கணிப்பொறி அறிவியல் பாடத்தில் அதிகப்படியாக 6,945 பேரும், கணக்குப் பதிவியலில் 1,946 பேரும் முழு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். பாடப்பிரிவு வாரியாக: அறிவியல் பாடப்பிரிவு 96.90% தேர்ச்சியுடன் முதலிடத்தில் உள்ளது. வணிகவியல் பிரிவு 92.67% தேர்ச்சி பெற்றுள்ளது. சிறப்புப் பிரிவினர்: மாற்றுத் திறனாளிகள்: தேர்வெழுதிய 8,855 மாற்றுத் திறனாளி மாணாக்கர்களில் 6,811 பேர் (76.92%) தேர்ச்சி பெற்றுள்ளனர். சிறைவாசிகள்: 250 சிறைவாசிகள் தேர்வெழுதிய நிலையில், அவர்களில் 238 பேர் (95.20%) தேர்ச்சி பெற்று அசத்தியுள்ளனர்.

குறிப்பு: மார்ச் 2ஆம் தேதி தொடங்கி மார்ச் 26ஆம் தேதி வரை நடைபெற்ற இந்தத் தேர்வின் முடிவுகள், திட்டமிட்டபடி மே 8ஆம் தேதி வெளியிடப்பட்டுள்ளன.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உலக ரெட் கிராஸ் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., சர்வதேச ரெட் கிராஸ் இயக்கத்தின் நிறுவனர் ஜூன் ஹென்றி டூணான்ட் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# ஆபரேஷன் சிந்தூர் நினைவாக 500 கிலோ எடையில் ஐம்பொன் நினைவுத் தூண்: கும்பகோணம் பகுதியில் தயாராகிறது




கும்பகோணம்:மே.9-

கும்பகோணம் வட்டம் மூப்பக்கோவிலில், 500 கிலோ எடையில் ஐம்பொன்னால் ஆன ஆபரேஷன் சிந்தூர் நினைவுத் தூண் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22ம் தேதி சுற்றுலா பயணிகள் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதற்கு பதிலடியாக இந்திய ராணுவம் கடந்தாண்டு மே மாதம் 7ம் தேதி ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடங்கியது. இதில், பாகிஸ்தான் மீது இந்திய ராணுவம் அதிரடி தாக்குதலை நடத்தி, அங்கிருந்த தீவிரவாதிகளின் முகாம் மற்றும் பாகிஸ்தான் ராணுவ நிலைகள் சிலவற்றை அழித்தது. இதன் முதலாம் ஆண்டு தினம் நேற்று நினைவு கூரப்பட்டது.இதற்கிடையே, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை வெற்றிகரமாக நடத்திக் காட்டிய இந்திய ராணுவத்தை கவுரவப்படுத்தும் வகையில், கடலூரில் இயங்கி வரும் ஷைன் இந்தியா சோல்ஜர்ஸ் வெல்ஃபர் அசோசியேஷன் சார்பில் ஐம்பொன்னால் ஆன நினைவுத் தூண் வடிவமைக்க முடிவெடுக்கப்பட்டது.அதன்படி, கும்பகோணம் வட்டம் மூப்பக்கோவிலில் ஸ்தபதி குமார் தலைமையிலான குழுவினர் ரூ.10 லட்சம் மதிப்பில் 500 கிலோ எடையில் 8 அடி உயரத்தில் ஐம்பொன்னால் ஆன நினைவுத் தூண் வடிவமைக்கும் பணியை கடந்த 2 மாதங்களாக மேற்கொண்டு வருகின்றனர்.இந்த நினைவுத் தூணின் அடித்தளம் 2 அடி விட்டமும், ஒன்றரை அடி அகலமும், அதன் மேல் ஒரு அடி பத்மமும் கொண்டதாக இருக்கும். அதற்கு மேல் மையத் தூண் 2 அடியிலும், குங்குமச் சிமிழ் இரண்டரை அடியிலும், தலைப்பாகத்தில் குங்குமம் வர்ணம் ஒரு அடியிலும் அமைக்கப்படுகிறது. மையத் தூணில் முப்படைகளின் இலச்சினைகள் பொருத்தப்படும்.ராணுவத்தில் ஒப்படைக்கப்படும்: இப்பணிகள் நிறைவடைந்த பிறகு பிரத்யேக வாகனத்தின் மூலமாக டெல்லிக்கு கொண்டு சென்று இந்திய ராணுவ தலைமையகத்தில் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கடலூர் ஷைன் இந்தியா சோல்ஜர்ஸ் வெல்ஃபர் அசோசியேஷன் தொண்டு நிறுவனத் தலைவர் மில்ட்ரி பாபு, ஆலோசகர் சத்தியநாராயணன், ஒருங்கிணைப்பாளர் அரவிந்தன் மற்றும் நிர்வாகிகள், முன்னாள் படைவீரர்கள் நலச் சங்கத்தினர் செய்து வருகின்றனர். முன்னதாக, முதலாமாண்டு நினைவு தினத்தையொட்டி நேற்று மாதிரி தூணுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் 2026 12 ஆம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடம் பெற்ற மாணவிகள் எம்.சர்மிளா (நாவலர் சோமசுந்தர பாரதியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி) எம்.தேவஸ்ரீ, (மாசாத்தியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி) எம்.ரம்யா (காக்கைபாடினியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி) ஆகிய மாணவிகளை ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார்கள் அருகில் கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன் , கல்வி அலுவலர் மோகன் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



# இலக்கை மீறி பாய்ந்த மதுரை ரயில்வே வருமானம்!

## பயணிகள் - சரக்கு சேவையில் அசத்தல்; ரூ.1408 கோடி வசூலித்து புதிய சாதனை

மதுரை,மே 9-

மதுரை ரயில்வே கோட்டம் கடந்த 2025ஞ்26 நிதியாண்டில் வருமானத்தில் புதிய உச்சத்தை எட்டி, மொத்தமாக ரூ.1408.69 கோடி வருமானம் ஈட்டி சாதனை படைத்துள்ளது. இது கடந்தாண்டை விட 13 சதவீதம் அதிகமாகும். மேலும் தெற்கு ரயில்வே நிர்ணயித்திருந்த இலக்கை விடவும் 5 சதவீதம் கூடுதலாக வருமானம் கிடைத்துள்ளது.

பயணிகள் சேவையில் அதிக வருமானம் ஈட்டிய மதுரை கோட்டம், பயணச்சீட்டு விற்பனையின் மூலம் மட்டும் ரூ.886.32 கோடி வசூலித்துள்ளது. கடந்த ஆண்டில் 4.89 கோடி பயணிகள் மதுரை கோட்ட ரயில்களில் பயணம் செய்துள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

சரக்கு போக்குவரத்திலும் மதுரை கோட்டம் அபார முன்னேற்றம் கண்டுள்ளது. ரூ.411 கோடி சரக்கு வருமானம் ஈட்டப்பட்டதுடன், நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மீறி 3.572 மில்லியன் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன.

குறிப்பாக தூத்துக்குடி மீளவிட்டானில் இருந்து கொல்கத்தாவுக்கு முதன்முறையாக சரக்கு ரயில் மூலம் மஞ்சள் பட்டாணி அனுப்பப்பட்டு ரூ.2.75 கோடி வருமானம் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பார்சல், லக்கேஜ், நடைமேடை சீட்டு, டிக்கெட் பரிசோதனை உள்ளிட்ட சேவைகள் மூலம் ரூ.60.65 கோடி வருமானம் கிடைத்துள்ளது. மேலும் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்தோர் மற்றும் விதிமீறலில் ஈடுபட்டவர்களிடம் இருந்து ரூ.12.73 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

உணவுக் கடைகள் வாடகை, விளம்பரங்கள், வாகன காப்பகங்கள், ஓய்வறைகள் மற்றும் கழிவு பொருட்கள் விற்பனை போன்ற பல்வேறு பிரிவுகள் மூலமும் கோடிக்கணக்கில் வருமானம் கிடைத்துள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# பாக் நீரிணை கடலை நீந்தி கடந்து பெங்களூரு ஐடி தம்பதி சாதனை



ராமேசுவரம்:மே.9-

தலைமன்னார் தனுஷ்கோடி இடையேயான பாக் நீரிணை கடல் பகுதியை 10 மணி 45 நிமிடங்களில் நீந்தி கடந்து பெங்களூருவை சேர்ந்த தம்பதி சாதனை படைத்தனர்.கர்நாடக மாநிலம் பெங்களூருவைச் சேர்ந்த தானிஸ் அப்டி (30), அவரது மனைவி விஷாலி பிரசித் (30). இருவரும் தகவல் தொழில்நுட்ப பொறியாளர்களாக பணிபுரிகின்றனர். பெங்களூரு அகாடமியில் நீச்சல் பயிற்சி பெற்று பல போட்டி களில் வெற்றி பெற்றுள்ளனர்.

இருவரும் இலங்கையில் உள்ள தலைமன்னாரில் இருந்து இந்தியாவில் உள்ள தனுஷ்கோடி வரையிலான பாக் நீரிணை கடல் பகுதியை நீந்தி கடப்பதற்காக இந்திய வெளியுறவுத்துறை, இலங்கை தூதரகம் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சகத்திடம் அனுமதி பெற்றனர்.

இதையடுத்து, ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 2 விசைப்படகுகளில் பயிற்சியாளர், மருத்துவர், மீனவர்கள் உள்ளிட்ட 20 பேர் கொண்ட குழுவினருடன் தலைமன்னாருக்கு புறப்பட்டுச் சென்றனர்.

தலைமன்னாரில் கடந்த புதன்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு நீந்த தொடங்கிய தானிஸ் அப்டி, விஷாலி பிரசித் பிற்பகல் 3.15 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனையை வந்தடைந்தனர். பாக் நீரிணை கடல் பகுதியை 10 மணி நேரம் 45 நிமிடங்களில் நீந்தி கடந்த முதல் தம்பதி என்ற சாதனையை படைத்துள்ளனர். இருவருக்கும் மரைன் மற்றும் பாதுகாப்பு படை அதிகாரிகள் உற்சாக வரவேற்பு அளித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# திருப்பூர் மாவட்டத்தில். மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே கோடைகால சிறப்பு முகாம்களை தொடங்கி வைத்தார்



திருப்பூர் மே.09

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே கடந்த (06.05.2026) திருப்பூர் மாநகராட்சி ஜெய்வாபாய் மாதிரி பெண்கள் மேல்நிலை பள்ளியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக்கல்வித் துறை இணைந்து நடத்தும் அரசு பள்ளி மாணவர்களுக்கான கோடைகால சிறப்பு முகாமை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள்.

திருப்பூர் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக்கல்வித் துறை இணைந்து நடத்தும் அரசு பள்ளி மாணவர்களுக்கான கோடைகால சிறப்பு முகாம் 2026 ( Summer camp 2026) இன்று முதல் மே 16 வரை ஜெய்வாபாய் மாதிரி பெண்கள் மேல்நிலை பள்ளியில் தினமும் காலை 10.00 முதல் மதியம் 1 மணி வரை இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. இம்முகாமில் செஸ், ஆர்ட் - பெயிண்ட், AI - ரோபோடிக்ஸ், Archery, Horse Riding, ஸ்போக்கன் இங்கிலீஸ், Drone, போட்டோகிராபி, பேக்கிங் - குக்கிங், Pottery ஆகிய 10 நிகழ்வுகள் பயிற்றுவிக்க பட உள்ளது.

அந்த வகையில் மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே ஜெய்வாபாய் மாதிரி பெண்கள் மேல்நிலை பள்ளியில் அரசு பள்ளி மாணவர்களுக்கான கோடைகால சிறப்பு முகாமை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள். தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் மாணவர்களுக்கு நேட் புத்தகங்களை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் புனித அந்தோணியம்மாள், பப்பீஸ் நிறுவன மேலாளர் முத்துராமகிருஷ்ணன், மாவட்ட கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டார்கள்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161